**திண்டுக்கல் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(19-12-2015 – 23-12-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 18-12-2015

**கடந்த கால வானிலை 15-12-2015 முதல் 17-12-2015 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 6.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 31-32 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 21-24 |
| மேக மூட்டம் | 5-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 65-79 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 8-11 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 23-12-2015 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 19.12.15 | 20.12.15 | 21.12.15 | 22.12.15 | 23.12.15 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 1 | 0.5 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 84 | 84 | 84 | 84 | 84 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| **காற்றின் திசை** | கிழக்கு வடகிழக்கு | கிழக்கு வடகிழக்கு | கிழக்கு வடகிழக்கு | கிழக்கு வடகிழக்கு | கிழக்கு வடகிழக்கு |

**குறுஞ்செய்தி :**

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவும்: டிசம்பர் 19 மற்றும் 20-ம் தேதியில் சில இடங்களில் இலேசான தூறல் வர வாய்ப்புள்ளது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: பருத்தி, மக்காச்சோளம், வாழை, கரும்பு மற்றும் காய்கறிகள்**

**பருவம்: பருத்தி- பூக்கும் பருவம், மக்காச்சோளம்- வளர்ச்சி பருவம், கரும்பு- தூர் கட்டுதல் பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொருத்து தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யலாம்.
- பருத்தியில் வெள்ளை ஈக்கள் மற்றும் தத்துப்பூச்சிகள் தாக்கத்தைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 % @ 5 மிலி அல்லது தையோமீத்தாகசம் 6 கிராம் 10 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- பருத்தியில் இரண்டு வாரங்களுக்கு இடைவெளியில் 45 நாளில் காய் புழுக்களைக் கட்டுப்படுத்த கார்பன்டஜிம் 500 கிராம் அல்லது மேன்கோசெப் 200கிராம் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2500 கிராம் /ஹெக்டர் தெளிப்பதன் மூலம் காய் அழுகல் நோயினைக் கட்டுப்படுத்தலாம்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவா்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.
- சொட்டுநிர் பாசனம் மேற்கொள்வதன் மூலம் நீர்த்தேவைகளைக் குறைக்கலாம்.